செ.வெ.எண்:76/மார்ச்/2019 நாள்:31.03.2019

## 24 திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருவெறும்பூர், புதுக்கோட்டை மற்றும் கந்தர்வகோட்டை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் செலவு பார்வையாளர் திரு.அனூப் குமார் வெர்மா, I.RS அவர்கள் ஆய்வு.

---- --- ----

இன்று 31.03.2019ஆம் தேதி 24. திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 142.திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி, 178 கந்தர்வகோட்டை (தனி) சட்டமன்ற தொகுதி மற்றும் 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி ஆகிய தொகுதிகளில் தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினரின் செயல்பாடுகளை தேர்தல் செலவு பார்வையாளர் திரு.அனூப் குமார் வெர்மா, **I.RS** அவர்கள் ஆய்வு செய்தார்.

காலை 11.00 மணியளவில் புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட களமாவூர் பகுதியில் பறக்கும்படையினர் வாகன சோதனை நடத்தியதையும், நண்பகல் 12.10 மணியளவில் புதுக்கோட்டை, மருத்துவ கல்லூரி அருகில் பறக்கும்படையினர் வாகன சோதனை நடத்தியதையும் கண்காணித்தார். அச்சமயம் புதுக்கோட்டை வட்டாட்சியர் உடனிருந்தார்.

பின்னர் கந்தர்வகோட்டை தொகுதிக்குட்பட்ட வைத்தூர்விளக்கம் என்ற இடத்தில் மதியம் 1.00 மணியளவில் நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளதைக் கண்காணித்தார். இதன் தொடர்ச்சியாக மாலை 4.30 மணியளவில் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேனேரிப்பட்டி சோதனைச்சாவடியில் நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகன சோதனை செய்வதைப் பார்வையிட்டார். இவ்வாய்வின் போது உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட வழங்கல் அலுவலருமான திருமதி.சி.கிறிஸ்டி மற்றும் திருவெறும்பூர் வட்டாட்சியர் திரு.அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**